# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2204/17 - 2020 දෙසැම්බර් මස 02 වැනි බදාදා - 2020.12.02

*2204/17 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 02 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## *பகுதி IV(அ) - மாகாண சபைகள்*

### *மாகாண சபை அறிவித்தல்கள்*

***மத்திய மாகாணத்தின் மாகாண சபை***

*மத்திய மாகாணத்தின் கௌரவ ஆளுநரின் அறிவித்தல்*

***1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய திருத்தப்பட்ட மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 277 (1)(i), 277 (1ஆ), (ஆ) ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் கட்டளை***

*மாத்தளை மாநகர சபையின் துணை மேயர் உள்ளடங்கலாக சபை உறுப்பினர் குழுவினால் மேயர் டல்ஜித் நந்தலால் அலுவிஹாரே அவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள முறையீட்டின் குறைபாடுகள் தொடர்பாக பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு, அவரினால் மாத்தளை மாநகர சபையின் மேயர் என்னும் வகையில் திருத்தப்பட்ட மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயமான) 277 (1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டள்ள தவறுகள் ஏதேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என 03 மாத காலவரையறைக்குள் அறிக்கை செய்வதற்கு என்னால் இலக்கம் 2190/24 மற்றும் 2020.08.25 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி மூலம் நியமிக்கப்பட்ட தனி நபர் பரிசீலனை ஆணைக்குழுச் சபையின் மூலம் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு முறைப்பாடு மற்றும் பதிலளித்தவரின் சாட்சியம், ஆவணங்கள் மற்றும் எழுத்து மூலமானவற்றை கவனத்திற் கொண்டதுடன், அவரை அவதானித்தல் மற்றும் முடிவுரையுடன் எனக்கு அளிக்கப்பட்டுள்ள 2020.11.24 ஆந் திகதிற்குரிய இறுதி அறிக்கையின்படி,*

*டல்ஜித் நந்தலால் அலுவிஹாரே அவர்கள் மாத்தளை மாநகர சபையின் மேயர் எனும் வகையில் அத்துறையின் பணிகள் மற்றும் செயற்பாட்டினை மேற்கொள்ளும் போது, திருத்தப்பட்ட மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயமான) 277 (1) (அ), (எ), (ஏ) மற்றும் (இ) ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்படட்டுள்ள தவறுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமைக்கு போதுமான அளவு சாட்சி உள்ளதென நான் திருப்திப்படுவதனால்,*




*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய திருத்தப்பட்ட மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயமான) 277 (1) (i) மற்றும் 277 (1ஆ) (ஆ) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைவாக மத்திய மாகாண ஆளுநர் வழக்கறிஞர் லலித் யூ. கமகே ஆகிய நான் மாத்தளை மாநகர சபையின் மேயர் டல்ஜித் நந்தலால் அலுவிஹாரே அவர்களை 2020.12.02 ஆந் திகதி தொடக்கம் மாத்தளை மாநகர சபையின் மேயர் பதவியில் இருந்து நீக்குகின்றேன்.*

*மேலும் பல்வேறு சட்டத்தின் ஊடாக திருத்தப்பட்ட மாகாண உள்ளூராட்சி நிறுவன வாக்கெடுக்கும் விசாரணைக் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) நியதிக்கு ஏற்ப செயற்படுவதற்கு மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கும் மற்றும் மாத்தளை மாநகர சபையின் நகராட்சி ஆணையாளருக்கும் இங்கு உத்தரவிடுகின்றேன்.*

**வழக்கறிஞர் லலித் யூ. கமகே,**
*மத்திய மாகாண ஆளுநர்.*

*2020, திசெம்பர் 02.*

*12-302*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.